# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

## மானியக் கோரிக்கை எண். 9


# செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு | 4 |
| 3. | கல்வி உதவித் தொகை | 5 |
| 4. | சிறுபான்மையினர் விடுதிகள் | 13 |
| 5. | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | 22 |
| 6. | கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் | 25 |
| 7. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 26 |
| 8. | ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி | 31 |
| 9. | கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் | 32 |
| 10. | மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல் | 33 |
| 11. | கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல் | 34 |
| 12. | பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 34 |

| | | |
|---|---|---|
| 13. | பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் | 37 |
| 14. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) | 41 |
| 15. | திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta" | 50 |
| 16. | தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) | 52 |
| 17. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 53 |
| 18. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 55 |
| 19. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 71 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 09

## சிறுபான்மையினர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு – 2021-2022

**முன்னுரை :-**

"*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்.*"

*(குறள் 972)*

இவ்வரசு, சிறுபான்மையின மக்களின் முன்னேற்றத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்காக பல நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திடவும், சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு

மற்றும் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நீதியரசர் இராஜேந்திர சச்சார் குழுவின் பரிந்துரைகளுக்கு செயல் வடிவம் அளிக்கவும், பாரத பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தின் செயலாக்கத்தை கண்காணித்திடவும், இச்சமூக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திடவும் தமிழ்நாடு அரசால் சிறுபான்மையினர் நல இயக்ககம் உருவாக்கப்பட்டு, இந்திய ஆட்சிப் பணி நிலையில் உள்ள அலுவலரை துறைத்தலைவராகக் கொண்டு 01.08.2007 முதல் இயங்கி வருகிறது.

சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசின் கல்வி உதவித்தொகை வழங்குதல், சிறுபான்மையினர் நல விடுதிகள், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுயதொழில் துவங்க கடனுதவி அளித்தல், உலமா மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட

உதவிகளை அளித்தல், கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணமும், இஸ்லாமியர் ஹஜ் புனித பயணமும் மேற்கொள்ள நிதியுதவி அளித்தல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வாழும் மதவழி, மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடையும் வகையில் இத்துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு

தனி இட ஒதுக்கீடு வழங்கக் கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசிலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டம், 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

## 3. கல்வி உதவித் தொகை

*"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"* *(குறள் 103)*

எனும் தமிழ்மறை கண்ட பெருநாவலரின் அறநெறியில் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் பள்ளி செல்லும் சிறார் முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்க்காணும் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்;
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்; மற்றும்,

3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

இக்கல்வி உதவி தொகைத் திட்டங்களால் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர். இதற்கான நிதியை 100 விழுக்காடு ஒன்றிய அரசு வழங்குகிறது. மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பயன்மாற்று முறையில் (Direct Benefit Transfer) மாணவ/மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு:–

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி |
|---|---|---|---|
| பள்ளிப் படிப்பு | 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ.1.00 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் |
| பள்ளி மேற்படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ.2.00 இலட்சம் | |
| தகுதி (ம) வருவாய் அடிப்படை | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | ரூ.2.50 இலட்சம் | |

## 3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இத்திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசால் 2008–2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், முந்தைய ஆண்டின்

இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் மாணவ, மாணவியர் பெற்றிருக்கவும் வேண்டும்.

ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்வோருக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500 வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500 வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்வோருக்கு மாதம் ரூ.100 வீதமும், 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்வோருக்கு மாதம் ரூ.600 வீதமும், ஒரு கல்வி ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் 3,81,333 மாணவ, மாணவியருக்கு கல்வி

உதவித் தொகையாக ரூ.7,645.72 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

மேல்நிலைப் பள்ளிக்கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசால் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதுடன், மாணவ, மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில்

50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகையில் சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000 முதல் ரூ.10,000 வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.2,300 முதல் ரூ.5,500 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.3,800 முதல் ரூ.12,000 வரையிலும் ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 44,294 மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.2,477.32 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில், தொழில் நுட்பம் / தொழிற்கல்வி பயிலும் தமிழகத்தைச் சார்ந்த ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட மதவாரி சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜைன வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2007–2008 முதல் செயல்படுத்தப்படுகிறது.

இக்கல்வி உதவித் தொகை பெறுவதற்கு பெற்றோர்/பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பதுடன், மாணவ, மாணவியர் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும்.

இக்கல்வி உதவித் தொகையின் கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட,

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி) – சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி) – திருச்சி
3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்) – காஞ்சிபுரம்
4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி) – சென்னை
5. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்) – திருச்சி

உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படும்.

ஏனைய அரசு / அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் தகுதியுள்ள சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு

அதிகபட்சமாக ரூ.20,000 வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், பராமரிப்புக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000 மற்றும் விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் பல்வேறு பாடப் பிரிவுகளில் இளங்கலை/ முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 5,279 மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.1,342.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 4. சிறுபான்மையினர் விடுதிகள்

தமிழ்நாட்டில் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித

இடையூறுமின்றி தொடர்ந்து பயில ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 18 விடுதிகள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 18 விடுதிகளில் 4 பள்ளி விடுதிகளும், 14 கல்லூரி விடுதிகளும் ஆகும். இவ்விடுதிகளில் 1,500 மாணவ, மாணவியர் தங்கி பயன் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 18 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி ஆகும் (திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் கல்லூரி மாணவர் விடுதி). 17 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.1,00,000க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் இவ்விடுதிகளில் சேர தகுதியுடையவர்களாவர்.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வியாண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

**4.1 உணவுக்கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,000 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1,100 ஆகவும், ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை நாட்களில் விடுதி மாணவ/ மாணவிகளுக்கு சிறப்பு உணவு கட்டணமாக ஒரு பண்டிகைக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.40–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.80–ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.50 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.75 ஆகவும் மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டில் மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.189.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2021–2022 ஆம் ஆண்டிற்கு சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.402.89 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பனிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.
2. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.
3. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.
4. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

5. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

6. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

7. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

8. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

10. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

11. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

12. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரகுட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன் வழங்கப்படுகின்றன.

13. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

**4.3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 18 விடுதிகளில் 10 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 8 விடுதிகளில், 3 விடுதிகளுக்கு ஏற்கனவே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பொதுப்பணித் துறையின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 5 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ.17.84 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2021–2022 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2020–2021ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்காக ரூ.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2021–2022ஆம் ஆண்டிற்கான விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி அவர்களுக்கு உதவும் பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால் "முகமதியன் கோஷா விதவை சாரிட்டி" என்ற

பெயரில் 01.10.1892–இல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்" என்று மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம், 12.08.1976–இல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கம் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

மேற்கண்ட சென்னை மாவட்ட சங்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழித் தலைவராக கொண்டு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டன.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர்

ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. தவிர, தையல், பூ-வேலைபாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2020-2021 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ.586.16 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.413.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான கிறித்துவ விதவைகள், மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தவிர, தையல், பூ– வேலைபாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை

மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.330.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009 ஆம் ஆண்டு அரசால் உருவாக்கப்பட்டது. மாநிலத்தில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்கள்,

தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது .

இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஓ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இவ்வாரியத்தில் இதுவரையில் 3,852 பயனாளிகளுக்கு ரூ.141.59 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 7.1 பதிவுபெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்:

வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வஃக்ப் நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இந்த பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க, மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000 இவற்றில் எது குறைவோ அதனை மானியமாக வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 8. ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு

புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக ரூ.37,000 வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழான பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள்/அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2021-2022ஆம் ஆண்டிற்கு ரூ.120 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய

உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென இதுவரை ரூ.700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 23 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.59.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.6 கோடி வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள் உள்ளிட்டோர், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர்

ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறைசென்று வெளிவந்த 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 11. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசால் ரூ.100 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 12. பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின

மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெவ்வேறு துறைகள் மூலமாக இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் மதிப்பாய்வு செய்து வருகின்றது.

**15 அம்ச திட்டங்கள்**

1. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்;
2. பள்ளிக் கல்வியை பெறுவதற்கான வாய்ப்பு;
3. உருது மொழியை கற்பிப்பதற்கான வசதியை ஏற்படுத்தல்;
4. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல்;
5. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ /

மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்;

6. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்;
7. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்;
8. தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்;
9. பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி;
10. மாநில மற்றும் ஒன்றிய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு;
11. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு;
12. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படுத்தல்;
13. இனக்கலவரங்களைத் தடுத்தல்;
14. இனக்கலவரத்தினை தூண்டுவோர் மீது குற்ற விசாரணை நடத்துதல்; மற்றும்,
15. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்குதல்.

## 13. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்)

பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும், ஏற்றத்தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என

கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள பின்வரும் 4 ஊராட்சிகள் மற்றும் 18 நகர்ப்புறங்களில் இத்திட்டம் தற்போது செயல்படுத்தப்படுகிறது:–

1. ஊராட்சிகள்

| **வ.எண்** | **மாவட்டம்** | **ஊராட்சிகள்** |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | திருவாடானை |
| 2. | இராமநாதபுரம் | மண்டபம் |
| 3. | நீலகிரி | கூடலூர் |
| 4. | புதுக்கோட்டை | மணமேல்குடி |

2. நகர்ப்புறங்கள்

| **வ. எண்** | **மாவட்டம்** | **வ. எண்** | **நகர்ப்புறங்கள்** |
|---|---|---|---|
| **1.** | கோயம்புத்தூர் | **1.** | குறிச்சி |
| | | **2.** | குனியமுத்தூர் |
| **2.** | திண்டுக்கல் | **3.** | திண்டுக்கல் |

| | | | |
|---|---|---|---|
| 3. | வேலூர் | 4. | வேலூர் |
| | | 5. | பேரணாம்பட்டு |
| 4. | இராணிப்பேட்டை | 6. | மேல்விஷாரம் |
| 5. | நாகப்பட்டினம் | 7. | நாகப்பட்டினம் |
| 6. | இராமநாதபுரம் | 8. | கீழக்கரை |
| 7. | திருநெல்நேலி | 9. | திருநெல்நேலி |
| 8. | தூத்துக்குடி | 10. | தூத்துக்குடி |
| | | 11. | காயல்பட்டிணம் |
| 9. | திருப்பத்தூர் | 12. | ஆம்பூர் |
| | | 13. | வாணியம்பாடி |
| 10. | கரூர் | 14. | பள்ளப்பட்டி |
| 11. | தென்காசி | 15. | தென்காசி |
| | | 16. | கடையநல்லூர் |
| 12. | கன்னியாகுமரி | 17. | கொல்லங்கோடு |
| | | 18. | நாகர்கோயில் |

இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33–40 சதவீதம் பெண்கள்/பெண்

குழந்தைகளுக்கான கட்டமைப்புகள்/வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படும்.

இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (smart class room), அரசு தொழிற்பயிற்சி நிலையம் / தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டிடங்கள், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர்

அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 11 மாவட்டங்களிலுள்ள 61 திட்டங்களுக்கு முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.1,280.63 இலட்சமும், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.853.75 இலட்சமும் என மொத்தம் ரூ.2,134.39 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.1,000 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ)

தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வியாபாரம் மற்றும் தொழில் செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய உதவிடும் வகையில் குறைந்த

வட்டி வீதத்தில் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 – ஆம் ஆண்டில் அரசால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர் இக்கழகத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இக்கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இந்நிறுவனம், புதுதில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையின

வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

இக்கழகத்தால் வழங்கப்படும் தனிநபர் காலக் கடன், விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) மற்றும் சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசிய கழகத்தின் பங்கு – 90 %

டாம்கோவின் பங்கு – 5 %

பயனடைவோரின் பங்கு – 5 %

**14.1 தனிநபர் காலக்கடன் திட்டம்.**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக

தொழில்/வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்– 8%<br>பெண்– 6% | கடன் திட்டம்–Iஇன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 2,720 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.1,943.12 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**14.2. விராசாத் –கைவினை கலைஞர் கடன் திட்டம்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்/ கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| **கடன் தொகை** | **வட்டி விகிதம்** (ஆண்டொன்றுக்கு) | **ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|
| விராசாத் கைவினை கலைஞர் கடன் திட்டத்தின் கீழ் | ஆண்– 5%<br>பெண்– 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |

| | | |
|---|---|---|
| ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கப் படுகின்றன. | | |

## 14.3 சுய உதவிக் குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்

ஆண்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவி குழுவில் உறுப்பினகள் அதிகபட்சமாக 20 நபர்களும், குறைந்தபட்சமாக 10 நபர்களும் இருத்தல் வேண்டும். இதில் குறைந்த பட்சம் 60% சிறுபான்மையினர் இருத்தல் வேண்டும். மீதமுள்ள 40% பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் /

சீர்மரபினர் / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.1,00,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப் புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.1,50,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண்– 10%<br>பெண்– 8% | கடன் திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம்

4,184 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,235.31 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 14.4 கல்விக் கடன்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால், அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

| **வ. எண்** | **கல்விக் கடன் தொகை** | **வட்டி விகிதம்** (ஆண்டொன்றுக்கு) | **பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது மேலும், வெளிநாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ 30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது | | |
| 2 | **கடன் திட்டம் – II** இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20இலட்சம் வரை வழங்கப்படுகிறது மேலும், வெளிநாடுகளில் கல்வி | மாணவர்க–ளுக்கு 8% மாணவியர்–களுக்கு 5% | கடன் திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

| | | | |
|---|---|---|---|
| | பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது | | |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ரூ.7.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 15. திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta"

திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta" திட்டத்தின்கீழ், சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.6 இலட்சத்துக்கு மிகாமல் இருத்தல்

வேண்டும். இப்பயிற்சிகளின் மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்/தொடர்புடைய துறை திறன் கவுன்சில்/மாநில திறன் மேம்பாட்டுக் கழகம்/தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் 200 மணி நேரம் முதல் 250 மணி நேரம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஸ்டிச்சரி (சூட்ஸ் மற்றும் கார்மெண்ட்ஸ்), பிரி அசெம்பிளி ஆப்பரேட்டர் மற்றும் எம்பிராய்டரி ஆகிய மூன்று வகையான பயிற்சிகளுக்கு ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (ATDC), மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) ஆகிய இரண்டு பயிற்சி நிலையங்கள் மூலம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் செலவில்

250 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப் பெற்று பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

## 16. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூ மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழி வழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும், தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) உருவாக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ.5 கோடியும், விதைத் தொகை ரூ.10 கோடியும், சம்பளம் மற்றும் இதர நிருவாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.16.09 கோடி

நிதியினை அனுமதித்து 2020–2021–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

## 17. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (தமிழ்நாடு சட்டம் 21/2010) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 01.08.2010 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆணையம், சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும்

மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

இவ்வாணையத்தின் தலைவராக திரு. S. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் 28.06.2021 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாணையத்திற்கு Dr. மஸ்தான் அவர்கள் துணைத் தலைவராகவும், 8 உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 17.1. மதவழி / மொழிவழி சிறுபான்மையினர்

தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கிறித்தவர், முஸ்லிம், ஜெயினர், சீக்கியர் மற்றும் புத்தமத்தினர் ஆகியோர் மதவழி சிறுபான்மையினர் எனவும், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஷ்ட்ரம் மற்றும் மராத்தி ஆகிய மொழிகளை தாய்மொழியாக கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் எனவும் தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

*"பொருட்களை கட்டி வையுங்கள்; அதன்*
*பலனை அனைவருக்கும் கொடுங்கள்"*

*– நபிமொழி*

*"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"* *– திருக்குறள்*

வக்ஃப் சட்டம், 1954 தமிழ்நாட்டில் 15.01.1955–இல் அமல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.01.1958–இல் அமைக்கப்பட்டது. 1995–ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) 01.01.1996 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப் படுகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையை தலைமையிடமாக கொண்டு தமிழகம் முழுவதும் 11 சரக அலுவலகங்களுடன் இயங்கி வருகிறது. 12 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் வாரியம் திருத்தியமைக்கப்பட்டு 19.09.2020 முதல் செயல்பட்டு வருகிறது. வாரியத்திற்கு புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, வாரியத்தின் தலைவராக திரு M. அப்துல் ரகுமான் அவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**பார்வை**

வக்ஃப் சட்டம், 1995–ன் பிரிவுகளின்படி வக்ஃபுகளை பாதுகாத்தல், மீட்டெடுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பார்வை எல்லைக்குள் வருகின்றன.

**குறிக்கோள்**

வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதில் பங்காற்றுதல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களுடன் நெருக்கமாக செயல்பட்டு அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்துதல் இதன் குறிக்கோளாகும்.

**18. 1 வக்ஃப் வாரியத்தின் பணிகள்**

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம், பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவுருக்களை (ஆவணங்கள்) பேணுதல்;
2. வக்ஃபு சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃபு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக

செயல்படுத்தப்படுகிறதா என கண்டறிந்து உறுதி செய்தல்;

3. வக்ஃபு நிர்வாகத்திற்காக அவ்வப்பொழுது அரசு வழங்கும் ஆணைகளை பின்பற்றுதல் மற்றும் கட்டளையிடுதல்;
4. வக்ஃபுகளின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் வகுத்தல்;
5. வக்ஃபுகளின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் உத்தேச வரவு செலவு கணக்குகளை ஆய்வு செய்தல்;
6. வக்ஃபு சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்;
7. இழந்த வக்ஃபு சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்;
8. வக்ஃபு மற்றும் வக்ஃபு சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்;
9. வக்ஃபு நிதியை நிர்வகித்தல்;
10. வக்ஃபு சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கோரிப் பெறுதல்;

11. வக்ஃபு சொத்துக்கள், கணக்குகள், ஆவணங்கள், வஸ்திர ஆவணங்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்;
12. வக்ஃபு சொத்தின் தன்மை, பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃபு சொத்துக்களை நில அளவை செய்தல்; மற்றும்,
13. வக்ஃபுகளைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களின் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கும், பெரிய அளவிலான பள்ளிவாசல் மற்றும் தர்காக்களை பராமரிப்பதற்கும் மானியம் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. மேலும், 1986 ஆம் ஆண்டு முஸ்லிம் பெண்கள் பாதுகாப்புச்

சட்டத்தின்படி விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற உத்தரவின்படி ஜீவனாம்சம் வழங்குதல் போன்ற பணிகளிலும் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ்.வக்ஃப் வாரியக் கல்லூரி இயங்கி வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின் கீழ் 7,452 வக்ஃபுகள் உள்ளன. அவற்றில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 2,814 வக்ஃபுகள் ஆகும். பதிவு செய்யப்படாதவை 4,638 ஆகும்.

### 18.2. வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 4–இன் படி வக்ஃபு சொத்துக்களை சர்வே செய்வதற்காக நில அளவை ஆணையரை, வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

அரசு உத்தரவுப்படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954–ஆம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள் மாவட்ட வருவாய் அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் நில அளவை ஆணையரால் 27 மாவட்டங்களில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள மாவட்டங்களிலும் நில அளவை பணிகள் நடைபெற்று வருகின்றன.

**18.3. வக்ஃப் தீர்ப்பாயம்**

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83–ன்படி தலைவர் மற்றும் 2 உறுப்பினர்களை

கொண்டு தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் அமைக்கப்பட்டு 06.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் செயல்பாட்டிற்காக 2021−2022 ஆம் ஆண்டிற்கு ரூ.75.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18.4 தமிழ் நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்ஃப்கள்**

நிர்வாக காரணங்களுக்காக சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 65−ன் கீழ் கொண்டு வரப்படுகின்றன. இவ்வக்ஃப்களில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அன்றாட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்பொழுது தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 85 வக்ஃப்கள் உள்ளன. வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 45 (7)−ன் கீழ் நிர்வாக கட்டணம் அவ்வக்ஃபுகளிலிருந்து பெறப்படுகிறது.

## 18.5 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் ஆளுகையின்கீழ் இயங்கும் வக்ஃப் நிறுவனங்களின் வக்ஃப் சொத்துக்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் போது வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54–ன் படியும், தமிழ்நாடு பொது வளாக (முறைகேடான ஆக்கிரமிப்பினை அகற்றுதல்) சட்டம், 1975–ன்படி [Tamil Nadu Public Premises (Eviction of Unauthorized Occupants) Act 1975] அச்சொத்துக்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தனி நபர்கள் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதை தடுத்திட தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவு சட்டம், 1908 பிரிவு 22(A)–ன்படி ஆட்சேபனை

கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 18.6 தமிழ் நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தற்போது ஆண்டு நிர்வாக மானியமாக ரூ.2.50 கோடி ஒப்பளிக்கப்படுகிறது. 2021–2022 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.2.50 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 18.7 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான பராமரிப்பு

முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 4 (2)ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி ஆண்டுக்கு ரூ.67,800 வாரியத்திற்கு செலவினம் ஏற்படுகிறது.

## 18.8 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 18.8.1 உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். உலமா ஓய்வூதியத்தினை அங்கீகரிக்க மாண்புமிகு அமைச்சர் தலைமையில் குழு செயல்பட்டு வருகிறது. தற்போது உலமா ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2,600 நபர்கள் பயன்பெற வழிவகை உள்ளது.

தற்போது 1,263 நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக 2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.454.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18.8.2 பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புக்காக தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.5 கோடியாக 2020–2021 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி வழங்கப்பட்டு 45 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. 2021–2022 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.6 கோடி வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18.8.3 வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான தொகுப்பு நிதி**

வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus fund) உருவாக்கப்பட்டுள்ளது.

**18.8.4 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000 மதிப்பூதியம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. அதன்படி 2021–2022 ஆம் ஆண்டில் காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ.67.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**18.9 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய வக்ஃப் கழக திட்டங்கள்**

**18.9.1 குவாமி வக்ஃப் போர்டு தரகியாத்தி திட்டம்.**

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைபடுத்தும் விதமாக மாநில வக்ஃப் வாரிய

பணிகளில் திறன் மேம்பாட்டினை கொண்டு வர கணினி உதவி புரோகிராமர்கள், சட்ட அலுவலர்கள், கணக்காளர்கள், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர்கள் ஆகியோரை நியமிக்க வேண்டியும், வக்ஃப் சொத்துக்களை GIS முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், முத்தவல்லிகளுக்கான பயிற்சி முகாம் நடத்திடவும், அலுவலக எழுதுபொருட்கள் வாங்கிடவும் இத்திட்டத்தின் கீழ் மத்திய வக்ஃப் கழகம் உதவி வருகிறது. இதன்படி மத்திய வக்ஃப் கழகம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.1.02 கோடியும், 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.86 இலட்சமும் வழங்கி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்கள் 100% கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், 13,000 வக்ஃப் சொத்துக்கள் GIS

முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல்கள் மத்திய வக்ஃப் கழக இணையதளம் www.wamsi.nic.in–இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**18.9.2 சஹாரி சம்பத்தி விகாஸ் யோஜனா**

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் வக்ஃப் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி மேற்கொள்ளும் இடத்தின் மீது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75%, இவற்றில் எது குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக மத்திய வக்ஃப் கழகத்தால் வசூலிக்கப்படும். இத்திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை மத்திய வக்ஃப் கழகத்தின்

இணைய தளம் www.centralwaqfcouncil.gov.in-ல் அறிந்து கொள்ள தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முத்தவல்லிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

### 18.9.3 தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (**NAWADCO)** நிதி உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகித்தாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தொடர்புடைய வக்ஃப் நிறுவனம் ஆகியன

குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழிவகை உள்ளது.

## 19. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002–ஐ (மத்திய சட்டம் எண்.35/2002) இயற்றிய பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும், ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவானது, அலுவல்சார் உறுப்பினராக செயலாளர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்த்து 12 உறுப்பினர்களை கொண்டு

2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டது.

**19.1 குழுவின் பணிகள்**

(i) இந்திய ஹஜ் குழுவின் வழிகாட்டுதலின்படி, ஹஜ் செய்ய விரும்பும் தமிழ்நாட்டிலுள்ள ஹஜ் பயணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுதல்;

(ii) மாநிலத்திற்கான ஒதுக்கீடு அளித்ததன் அடிப்படையில், தேவைப்பட்டால் குறாவின் (குலுக்கல் முறையில்) மூலம் பயணிகளைத் தேர்வு செய்து விண்ணப்பங்களை இந்திய ஹஜ் குழுவிற்கு அனுப்புதல்;

(iii) அவ்வப்போது ஹஜ் புனிதப் பயணிகளுக்கு அறிவுரைகளை வழங்குதல் மற்றும் அவர்களிடமிருந்து பெறப்படும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கங்களை அளித்தல்;

(iv) மக்காவில் புனிதப் பயணிகள் தங்குவதற்கேற்ப கட்டடங்களைத் தேர்வு செய்ய பிரதிநிதிகளை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்பி வைத்தல்;

(v) தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கவனிக்க ஹஜ் தொண்டர்களை தேர்வு செய்து அனுப்புதல்;

(vi) ஒவ்வோர் ஆண்டும் ஹஜ் வழிகாட்டி, ஹஜ் மற்றும் உம்ரா கையேடுகள் ஆகியவற்றை

அச்சிட்டு ஹஜ் புனிதப் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்;

(vii) சென்னை – ஜித்தா – மதினா – சென்னை விமானங்களை நேரடியாகவும், வெற்றிகரமாகவும் இயக்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்;

(viii) ஹாஜிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து மும்பை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகார அமைச்சகம் முதலியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு முடிந்த வரையில் தீர்வு காண்பதற்கு உதவுதல்;

(ix) பல்வேறு மாவட்டங்களில் புனிதப் பயணிகளுக்கு புத்தறிவுப் பயிற்சி மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்ததுதல்;

(x) மக்கா மற்றும் மதீனா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்துதல்; மற்றும்,

(xi) புனிதப் பயணிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி செய்துக் கொடுத்தல் மற்றும் புனிதப் பயணிகள் விமான நிலையம் செல்வதற்கு பேருந்து வசதி அளித்தல்.

### 19.2 ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடுகள்

2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் முஸ்லிம் மக்கள் தொகைக்கேற்றவாறு நம்நாட்டிற்கு அளிக்கப்படும் ஒதுக்கீட்டை, ஒன்றிய அரசு பல்வேறு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது. ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை புனிதப் பயணிகளிடமிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு வரவேற்கிறது. ஒவ்வோர் ஆண்டும், வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை விட அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. தமிழகத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்ட வாரியாக குலுக்கல் நடத்தப்பட்டு, பயணிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக சென்னை விமான நிலையத்திற்கு பதிலாக கொச்சி விமான நிலையத்தை புறப்பாட்டு தளமாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

இந்திய ஹஜ் குழுவின் அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு தன் பணிகளை மேற்கொள்கிறது. பயணிகளைத் தெரிவு செய்தல், பயணிகளுக்கான விமானப் பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்களை ஒதுக்குதல் முதலியவற்றை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து முடிவு செய்கின்றன.

## 19.3 மாநில அரசால் வழங்கப்படும் மானியங்கள்/ உதவிகள்:

### 19.3.1 நிர்வாக மானியம்.

ஒவ்வோராண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியமாக தமிழ்நாடு அரசு ரூ.50 இலட்சம் வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிர்வாக செலவினங்களை தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மானியத்திலிருந்து ஹஜ்

குழு மேற்கொள்கிறது. 2021–2022 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.3.2 தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம்.**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 4,397 ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஹஜ், 2020 மற்றும் 2021–க்கான பயணத்தை சவூதி அரேபியா அரசு இரத்து செய்துள்ளது.

**19.3.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்.**

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்கும் உண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியம் அளிக்கிறது. இத்திட்டத்திற்காக 2021–2022ஆம் ஆண்டிற்கு ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.3.4 இதர மானியங்கள்.**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தை தமிழ்நாடு அரசு ஈடு செய்கிறது. இந்திய ஹஜ் குழு, ஒன்றிய சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம்

மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகம் முதலியவற்றால் நடத்தப்படும் அனைத்து இந்திய ஹஜ் மாநாடு மற்றும் ஹஜ் தொடர்பான கூட்டங்களில் ஹஜ் குழு அலுவலர்கள் கலந்து கொள்வதற்கான பயணப்படி மற்றும் தினப்படி செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்கிறது. மேலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் கணினி வழங்குதல் அல்லது பிற உபகரணங்களை அளிக்கவும் தமிழ்நாடு அரசு மானியங்களை அளிக்கிறது.

**முடிவுரை**

இந்த அரசு சிறுபான்மையினரின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்துவதன் வாயிலாக சிறுபான்மையினரின் சமூக, கல்வி மற்றும்

பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்திட தொய்வின்றி பாடுபட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நலனுக்காகவும் இவ்வரசு தொடர்ந்து செயலாற்றும்.

**செஞ்சி கே. எஸ். மஸ்தான்,**
**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை**




துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்

09.07.2021 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை 09.07.2021 அன்று தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்தனர்.



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 10.06.2021 அன்று துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




**செங்கல்பட்டு மாவட்டத்தில் 20.07.2021 அன்று மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலமாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.**